**செய்தி வெளியீடு எண்: 947** **நாள்: 20.12.2018**

**மாணவ மாணவியர் மற்றும் பொது மக்களுக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்கிற்காக தமிழ்நாடு அரசின் "பண்ணை சுற்றுலாத் திட்டம்"**

தற்போது பெருநகரங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை இயந்திரமயமாக இருப்பதால் இயற்கையுடன் ஒன்றி வாழும் வாய்ப்புகளை பெருவாரியான மக்கள் இழந்து வருகின்றனர். இந்தியாவில் நகரங்களில் வசிக்கும் 35 விழுக்காடு மக்கள் கிராமங்களில் உறவினர்கள் இன்றியும்,43 விழுக்காடு மக்கள் கிராமங்களுக்கு செல்ல வாய்ப்புகள் இன்றியும், நேரமின்றியும் உள்ளனர். இதனால் நகர்புறங்களில் உள்ள மக்கள் பசுமை சூழலின்றி பணிபுரிவதால் மன அழுத்தம் நிறைந்த சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

மேலும், நகர்புற இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் தான் உண்ணும் உணவு எங்கிருந்து வருகிறது? எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறியாமல் உள்ளனர். மேலும் உணவு உற்பத்தியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெறும் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்தில் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் பண்ணை சுற்றுலா திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 61 அரசு தோட்டக்கலை பண்ணைகளும், 19 பூங்காக்களும் செயல்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக 23 தோட்டக்கலை பண்ணைகள், 2 பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு **பண்ணை சுற்றுலாத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக பயிர்களைக் குறித்தும் அதனை சாகுபடி செய்யும் நவீன முறைகளைப் பற்றியும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு பண்ணை சுற்றுலா திட்டம் பேருதவியாக அமையும். மேலும், தோட்டக்கலை பயிர் சாகுபடியில்

விருப்பமுள்ளவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், தங்களை விவசாயத்தில் ஈடுபடுத்திக் கொள்ளவும் பண்ணை சுற்றுலா ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும்.

எனவே பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பொது மக்கள் தங்கள் பகுதிக்கு அருகிலுள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு வருகை புரிந்து தோட்டக்கலை பண்ணைகளின் செயல்பாடுகள், பயிர்சாகுபடி முறைகள், நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் இயற்கை சார்ந்த தோட்ட அமைப்பு ஆகியவற்றை கண்டு களிப்பதோடு அவற்றை பற்றி அறிந்து கொள்ளவும் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ள இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் பயனடைய பெரியவர்களுக்கு ரூ. 50ம், சிறியவர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ரூ. 25ம் நுழைவு கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு வருகை புரியும் பொது மக்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் பண்ணையிலேயே இளநீர், எலுமிச்சை பழச்சாறு போன்ற இயற்கையான பானங்கள் இலவசமாக வழங்கப்படும். பண்ணையின் அமைப்பு மற்றும் நடைபெறும் செயல்பாடுகள் குறித்து தோட்டக்கலை அலுவலர் அவர்களால் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்படும். பண்ணை நாற்றங்கால் பகுதியில் செடிகள் உற்பத்தி முறைகள் பற்றி செயல்முறை விளக்கமும் செய்து காண்பிக்கப்படும்.

பண்ணை முழுவதும் சுற்றி காண்பிக்கப்பட்டு தோட்டக்கலை பயிர்களை விளக்கமாக அறிமுகப்படுத்துவதுடன் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்படும். இறுதியாக ஒவ்வொரு பயனாளிக்கும் தோட்டக்கலை நடவு செடி ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

எனவே, பொதுமக்களோ, மாணவ மாணவியரோ தங்களது வட்டார அளவில் செயல்படும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது மாவட்ட

அளவிலான தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தையோ அணுகி இத்திட்டத்தின் கீழ் பயனடைய முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது தவிர உழவன் கைபேசி செயலி மற்றும் வாட்ஸ்அப் செயலி வாயிலாகவும் முன்பதிவு செய்துகொள்ளலாம். இத்திட்டம் தொடர்பான கூடுதல் தகவல்களை கீழ்கண்ட முகவரிகளில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இணையதளம் : http://tnhorticulture.tn.gov.in/horti/

முகநூல் : Thottakalai

டிவிட்டர் :THOTTAKALAI

வாட்ஸ்அப் எண்: 9894071746

**தொலைப்பேசி தொடர்புக்கு**

| | | |
|---|---|---|
| தோட்டக்கலை இயக்குநர்அலுவலகம் சென்னை | – | 044–28524643 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், சென்னை | – | 044 – 25554443 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், காஞ்சிபுரம் | – | 044 – 27222545 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், கிருஷ்ணகிரி | – | 04343 – 231130 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், சேலம் | – | 0427 – 2451382 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், கன்னியாகுமரி | – | 04652 – 279776, 04652 – 279772 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், புதுக்கோட்டை | – | 04322 – 228394. 04322 – 224743 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், இராமநாதபுரம் | – | 04567 – 230328, 04567 – 230832 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், நீலகிரி | – | 0423 – 2444056, 0423 – 2444086 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், நாமக்கல் | – | 04286 – 280827, 04286 – 280828 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், சிவகங்கை | – | 04575 – 246161. 04575 – 240409 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், தேனி | – | 04546 – 255780 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், விருதுநகர் | – | 04562 – 252393, 04562 – 252045 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், தஞ்சாவூர் | – | 04362 – 271880 |
| தோட்டக்கலை துணை இயக்குநர், கடலூார் | – | 04142 – 291878, 04142 – 201664 |




தேவக்கோட்டை , அரசு தோட்டக்கலை பண்ணைக்கு **பண்ணை சுற்றுலா திட்டத்தின்** கீழ் மாணவர்கள் வருகை புரிந்தனர்.



மாதவரம் , அரசு தோட்டக்கலை பண்ணையில் பண்ணை சுற்றுலா திட்டத்தின் கீழ் மாணவியர்களுக்கு குழித்தட்டு காய்கறி நாற்று உற்பத்தி குறித்து செயல்விளக்க பயிற்சி



**பண்ணை சுற்றுலா திட்டத்தின்** கீழ் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பாதுகாக்கப்பட்ட சூழலில் (பசுமைக்குடில்) பயிர்சாகுபடி மற்றும் நிலப்போர்வை அமைத்தல் குறித்து பயிற்சி

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**